# வெள்ளத்தின்போது பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளியுங்கள்.

வெள்ளம் ஏற்படக்கூடிய காலங்களில் உங்களின் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் நலனைக் காக்கும் பொருட்டு மின்சாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி எச்சரிக்கையாக இருங்கள்.




## வெள்ளத்தின்போது

- மின்சாரத் தாக்குதலுக்கு ஆளாவதைத் தவிர்க்கும் பொருட்டு மின்னியல் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும், அதோடு பிரதான மின் விசை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்
- நீர் மட்டம் அதிகரிக்குமேயானால், மின்சார விநியோகத்தை உடனடியாகத் துண்டிப்பதற்கு 15454 என்ற மின்சார வாரியத்தின் (TNB) சேவை மையத்திற்கு அழைக்கலாம் அல்லது Facebook TNB CareLine வழியாகத் தகவல் தெரிவிக்கலாம்.
- வெள்ள நீரில் மூழ்கிக்கிடக்கும் மின்னியல் சாதனங்களையோ அல்லது மின்காப்பு சுற்றப்பட்டிருந்தாலும்கூட எந்தவொரு மின்சாரக் கம்பிகளையோ தொடக்கூடாது.
- மின்சார தாக்குதலுக்கு ஆளாவதைத் தவிர்க்கும் வகையில் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கும் இரும்புக் கம்பங்கள் மற்றும் மின்சார வாரியத்தின் (TNB) இணைப்புகளிலிருந்து ஒதுங்கியே இருக்க வேண்டும்.
- அனைத்து மின் பொருத்துவாய் இணைப்புகளும் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருப்பதோடு, அனைத்து மின்னியல் சாதனங்களும் மின்சார தொடர்புகளில் இருந்து அகற்றப்பட்டிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- உங்கள் வீட்டில் solar PV பொருத்தப்பட்டிருந்தால், அதை உடனே நிறுத்தம் செய்து விடுங்கள். மின்சார விநியோகம் உங்கள் வீட்டு மின்கம்பித் தொடர்புகளினூடே மீண்டும் ஈர்க்கப்படுவதை இதன் வழி தவிர்க்கலாம்.
- வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக பிரதான மின் விசையை நிறுத்தம் செய்யுங்கள்.

## வெள்ளத்திற்குப் பிறகு

- வீட்டில் எந்த மின்னியல் சாதனங்களையோ அல்லது மின்சாரக் கம்பிகளையோ சுத்தம் செய்வதற்கு முன்னதாக பிரதான மின் விசையை நிறுத்தம் செய்யுங்கள்.
- வெள்ள நீரினால் பாதிக்கப்பட்ட அனைத்து மின்னியல் சாதனங்கள் மற்றும் மின் பொருத்துவாய் இணைப்புகளும் மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கு முன்னதாக Energy Commission-உடன் பதிவு பெற்றுள்ள மின்சாரக் குத்தகையாளரால் அவை முதலில் பரிசோதிக்கப்பட்டுள்ளதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.
- மின்சாரக் கம்பிக்கு அருகாமையில் உள்ள மரக்கிளைகளுக்கு அருகில் செல்வதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் அவற்றில் இன்னும் மின்னோட்டம் இருக்கக்கூடும். உடனடி நடவடிக்கைகளுக்கு TNB-ஐ விரைந்து தொடர்பு கொள்ளுங்கள்.
- மின்சாரக் கம்பிக்கு மிக அருகில் இரும்பு/அலுமினிய ஏணிகள் அல்லது கம்பங்களைப் பயன்படுத்தக் கூடாது.
- பிள்ளைகளைப் பெற்றோர்கள் எப்போதும் கண்காணிக்க அறிவுருத்தப்படுகின்றனர். கீழே விழுந்து கிடக்கும் மின் கம்பங்கள் அல்லது அறுந்த மின் கம்பிகளை அவர்கள் தொடாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மின்சார விநியோக இணைப்பு குறித்து ஏதேனும் பிரச்சனைகளோ அல்லது பிற விவகாரங்களோ இருக்குமேயானால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.**

**TNB Careline: 15454**

**TNB CareLine**

**வெள்ள பாதுகாப்பு வழிகாட்டியைப் பதிவிறக்கம் செய்ய இந்த QR குறியீட்டை அலகிடவும்**

Tenaga Nasional Berhad 199001009294 (200866-W)

TENAGA NASIONAL
Better. Brighter.